පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය - **492**

## දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - බදුල්ල

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක **119(4)** යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் - 492

## மாவட்ட செயலகம் - பதுளை

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Parliamentary Series No – 492

# District Secretariat – Badulla

Submission of the observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No.119 (4)

பிண்ணினைப்பு 01

**<u>இலங்கை பாராளுமன்ற அரச கணக்குகள் தொடர்பான குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட நிலையியற் கட்டளை 119(4) தொடர்பான அவதானிப்புகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை பாராளுமன்றத்துக்கு முன்வைத்தல்.</u>**

பாராளுமன்ற வெளியீட்டு இல : 492

மாவட்ட செயலகம், பதுளை.

| **அ.க குழுவினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய முன்னேற்றம்** |
|---|---|
| செலவு பயன்பாட்டு பதிவேடு இற்றைப்படுத்தப்படாமை | செலவு பயன்பாட்டு பதிவேடு இற்றைப்படுத்தி நடாத்தி செல்லுமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது இது இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. |
| 2004.05.11 திகதியிலான 171/2004 இலக்க அரச கணக்கு சுற்றறிக்கை பிரகாரம் அரச வேதன தயாரிப்பு கணணி மென்பொருளுக்குரிய முதலாவது கடவுச்சொல் கணக்காளர் அல்லது அனுமதியளிக்கப்பட்ட பதவிநிலை உத்தியோகத்தர் மாத்திரம் அறிந்திராமை | இவ் அரச கணக்கு சுற்றறிக்கை பிரகாரம் அரச வேதன தயாரிப்பு கணணி மென்பொருளுக்குரிய முதலாவது கடவுச்சொல் கணக்காளரால் மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றது. |
| 2004.05.11 திகதியிலான 171/2004 இலக்க அரச கணக்கு சுற்றறிக்கை பிரகாரம் அரச வேதன தயாரிப்பு கணணி மென்பொருளுக்குரிய கடவுச்சொல் மூன்று மாதத்திற்கொரு முறை மாற்றப்படாமை | இவ் அரச கணக்கு சுற்றறிக்கை பிரகாரம் அரச வேதன தயாரிப்பு கணணி மென்பொருளுக்குரிய கடவுச்சொல் மூன்று மாதத்திற்கொரு முறை மாற்றப்பட வேண்டுமென உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.மேலும் கடவுச்சொல்லை மாற்றுவதற்கு நடாத்தி செல்லப்படும் பதிவேடு கணக்காளர் பொறுப்பில் உள்ளது. |
| வருடாந்த பெறுகை திட்டமிடலை தயார் செய்யப்படாமை | வருடாந்த பெறுகை திட்டமிடலை தயார் செய்யுமாறு விடய பொறுப்பு உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன், 2026 ஆம் ஆண்டிற்கான APP/MPP/APPP மற்றும் வருடாந்த பெறுகை திட்டமிடலுக்கான கால அட்டவணை தயாரிக்கப்பட்டு உரிய அமைச்சின் அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| கணக்காய்வு தலைமை அதிபதியால் முன்வைக்கப்பட்ட அனைத்து கணக்காய்வு விசாரணைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் விடையளிக்காமை | தவணைக்கொரு முறை நடைபெறும் ஒவ்வொரு கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டத்திலும் இது தொடர்பாக அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், முன்னேற்ற மதிப்பாய்வும் மேற்கொள்ளப்படும். தாமதத்தை தவிர்ப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.கணக்காய்வு விசாரணைகளுக்கான பதில்களை உரியதிகதிக்கு சரியாக பெற்றுத்தருமாறு அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும்அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்போதுஒரு மாதத்திற்குள் விடையளிக்கப்படுகின்றது. |
| உள்ளக கணக்காய்வு விசாரணைகளுக்கு ஒரு மாதத்திற்குள் விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்கள் தெரிய வந்துள்ளமை | தாமதத்தை தவிர்ப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் கணக்காய்வு விசாரணைகளுக்கான பதில்களை உரிய திகதிக்கு சரியாக பெற்றுத்தருமாறு அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.தற்போது ஒரு மாதத்திற்குள் விடையளிக்கப்படுகின்றது. |
| நி.பி . 134 (2) பிரகாரம் கணக்காளர் தலைமையதிபதியினால் கோரப்படுகின்ற உள்ளக கணக்காய்வு வேலைத்திட்டம் வருட ஆரம்பத்திலே தயாரிக்கப்பட்டிருக்காமை | நி.பி . 134 (2) பிரகாரம் உள்ளக கணக்காய்வு வேலைத்திட்டம் வருட ஆரம்பத்திலே தயாரிக்கப்படுகின்றது. இவ்வருடத்தின் உள்ளகக் கணக்காய்வு வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டு 2026.01.23 ஆம் திகதி முகாமைத்துவ கணக்காய்வு திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது. |
| 2017.06.26 திகதி 01/2017 இலக்கமடைய சொத்து முகாமைத்துவ சுற்றிக்கையின் 07 ம் பந்தியின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டசொத்துகள் மற்றும் பாவனையிலிருந்து அகற்றப்பட வேண்டியவைகள் தொடர்பான தகவல்கள் கொம்ப்ரோலர் நாயக அலுவலகத்துக்கு முன்வைக்காமை | இது தொடர்பாக விடய உத்தியோகத்தருக்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன், 2025 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துகள் மற்றும் பாவனையிலிருந்து அகற்றப்பட வேண்டியவைகள் தொடர்பான தகவல்கள் கொம்ப்ரோலர் நாயக அலுவலகத்துக்கு அனுப்பிவைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன. |

| | |
|---|---|
| பழுதடைந்த வாகனமொன்றை 08 மாத குறைந்த காலத்திற்குள் பாவனையிலிருந்து அகற்றாமை | இப்போதைக்கு 02 வாகனங்கள் பாவனையிலிருந்து அகற்றப்படவுள்ளதோடு , அவ் வாகனங்களை பாவனையிலிருந்து அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன. |
| அரச வாகனங்கள் விபத்து தொடர்பாக நி.பி பிரகாரம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை. | அரச வாகனங்கள் விபத்து தொடர்பாக நி.பி பிரகாரம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு உரிய உத்தியோகத்தருக்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன், தற்சமயம் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| ஒரு வருடத்திற்கும் மேலாக காணப்படுகின்ற வரவேண்டிய கடன் மீதி | 2023 ம் ஆண்டில் காணப்பட்ட கடன் தொகையில் ரூ. 580,675.66 தொகை தற்போது தீர்க்கப்பட்டுள்ளதுடன், ரூ. 648,327.91 தொகை தீர்க்கப்படவுள்ளது என குறிப்பிடுவதோடு, அத் தொகையையும் தீர்ப்பதற்கு உரிய உத்தியோகத்தருக்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. |
| பொது வைப்பு கணக்கில் காலாவதியாகியுள்ள வைப்புகள் தொடர்பாக நி.பி 571 பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை | பொது வைப்பு கணக்கில் காலாவதியாகியுள்ள வைப்புகள் தொடர்பாக நி.பி 571 பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| நி.பி 371 பிரகாரம் சிறு கட்டு நிதி , பணிகள் முடிவடைந்து 10 நாட்களுக்குள் தீர்வை செய்யப்படாமை | .பி 371 பிரகாரம் சிறு கட்டு நிதி ,பணிகள் முடிவடைந்து 10 நாட்களுக்குள் தீர்வை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| இணைப்புசெய்யப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தவிர அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மீறி அலுவலக உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளமை | ஆட்சேர்ப்பு மற்றும் இணைப்புச்செய்தல் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட்டு , வெவ்வேறு அலுவலகங்களுக்கு இணைப்பு செய்யப்படுகின்றன. |
| மாதாந்தம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தை நடத்தாமை | ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தை நடத்த திட்டமிட்டிருந்தாலும், ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்ட இணைத் தலைவர்களிடம் திகதியை முன்வைத்தாலும் , அவர்களின் பாராளுமன்ற அமர்வு ,பொது மக்கள் தினம், விசேட வைபவங்கள் போன்ற அனைத்தையும் கருத்திற் கொண்டு இக்கூட்டத்திற்காக திகதி பெற்றுக்கொடுக்கப்படும்.<br>அதன்படி , இக் குழு கூட்டத்தின் இணைத் தலைவர்களின் அதிக |

| | |
|---|---|
| | வேலைப்பழு காரணமாக மாதாந்தம் நடாத்துவது சவாலாக இருந்தாலும், இயன்றளவு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தை ஒவ்வொரு மாதமும் நடத்த நடவடிக்கை மேற்கொள்கின்றேன். |
| மாவட்ட செயலாளரினால் கூட்டப்படும் பிரதேச செயலாளர்களின் கூட்டத்தை மாதாந்தம் நடத்தாமை. | சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டத்தை மாதாந்தம் கூட்ட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கினறேன். எனினும் நாட்டில் நிலவுகின்ற எரிவாயு தட்டுப்பாடு மற்றும் ஏனைய காரணங்களினால் ஒரே காரணத்திற்காக மீண்டும் மீண்டும் வரவழைக்கப்படா விட்டாலும், ஏனைய சுற்றாடல் குழு , மாவட்ட ஒருங்கிணைப்பு குழு , வனப் பாதுகாப்பு கூட்டம் போன்ற பொது கூட்டங்ளை நடாத்தும் போது மற்றும் நிகழ்நிலை மூலம் , விசேட கலந்துரையாடல்களின் போதும் தேவையான அறிவுறுத்தல்கள் , முன்னேற்ற மதிப்பாய்வுகள், விசேட கலந்துரையாடல்களை நடத்துவது தடையின்றி மேற்கொள்ளப்படுகின்றன. |
| மாவட்ட வீடமைப்பு குழுவை மாதாந்தம் கூட்டப்படாமை | மாவட்ட வீடமைப்பு குழு தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் ஏற்பாடு செய்யப்படுவதோடு, அக்கூட்டத்திற்காக பிரதேச செயலாளர்களை வரவழைப்பது மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்றது. |
| மாவட்ட உர குழுக்கூட்டம் மாதாந்தம் கூட்டப்படாமை | தற்போது மாவட்ட உர குழுக்கூட்டம் நடாத்தப்படுகின்றது. |
| மாவட்ட விலை நிர்ணயக்குழு மாதாந்தம் கூட்டப்படாமை | பொது நிருவாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் உள்நாட்டலுவல்கள் பிரிவின் ஊடாக 2025.09.01 ஆம் திகதியிலான கடிதம் மூலம் அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கை இல 03/2025 ல் 2.3 படி மாவட்ட விலை நிர்ணயக்குழு உரிய வருடத்தின் முதல் மாதத்தில் கூட்டப்படல் வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு மாதமும் கூட்ட படவேண்டுமென குறிப்பிடப்பட வில்லை |
| 2018.01.24 ஆம் திகதியிலான 05/2018 (1) இலக்க சுற்றறிக்கையின் திருத்தம் 2008.02.06 இல 05/2008 பொது நிருவாக மற்றும் முகமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் பிரஜைகள்/ சேவை பெறுநர் கொள்கை பட்டயம் முறைப்படி தயாரிக்காமை | தற்போது , பயன்படுத்தப்பட்ட பிரஜைகள்/ சேவை பெறுநர் கொள்கை பட்டயம் பிரதேச செயலகங்களின் உடாக காட்சிப்படுத்தப்படுகின்றது. |

| | |
|---|---|
| முழு அலுவலக உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய செயற்றின் உடன்படிக்கை ஒன்றை தயாரித்து செயற்படுத்தாமை | முழு அலுவலக உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய செயற்றின் உடன்படிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |
| அலுவலகத்தின் கணக்குகள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம் தகுதியற்ற நிலையிலோ அல்லது பாதகமான நிலையில் உள்ளது. | நிதிக்கூற்றுகள் வாயிலாக உண்மை மற்றும் நியாயமான நிலைமையை வெளிக்கொணர்வதற்கான கணக்காய்வு அபிப்பிராயமொன்றை பெற்றுக்கொள்வதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு தேவையான அறிவுரை வழங்கப்பட்டது. |
| உரிய வருடத்தின் செயற்றிறன் இலக்கு உரிய திகதியில் முன்வைக்கப்படாமை | தற்போது உரிய திகதியில் செயற்றிறன் இலக்கு முன்வைக்கப்படுகின்றது. |
| மாவட்ட மற்றும் பிராந்திய போதைப்பொருள் தடுப்பு குழுக்கூட்டம் தவணைக்கொரு தடவை கூட்டப்படாமை | மாவட்ட போதைப்பொருள் சபையை ஸ்தாபித்து தவணைக்கொரு தடவை கூட்டம் நடாத்தப்படுகின்றது. |
| மாவட்ட காணிப் பயன்பாட்டுக் குழு குறைந்த பட்சம் தவணைக்கொரு தடவையாவது கூட்டப்படாமை | உள்ளக சுற்றறிக்கை பிரகாரம் தேவையின் பொருட்டு மாவட்ட காணிப் பயன்பாட்டுக் குழுவின் தலைவர் மற்றும் செயலாளரினால் தீர்மானிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் மாத்திரம் குழுக்கூட்டம் நடாத்தப்படுகின்றது. |
| திட்டமிடப்பட்ட பயிற்சி சந்தர்ப்பங்களில் , பயிற்சி பெற்றுக்கொண்ட சந்தர்ப்ப அளவு 50% ற்கும் குறைவான மட்டத்தில் காணப்பட்டமை | கொவிட் பொருளாதார சிக்கல்கள் மத்தியில் இயன்றளவு பயிற்சிகள் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பெரும்பாலான பயிற்சிகள் நிகழ்நிலை மூலம் நடாத்தப்பட்டுள்ளன. |
| அனைத்து உத்தியோகத்தர்களும் சொத்து பொறுப்பு பிரகடனத்தை முன்வைக்காமை | 01/2025 சுற்றறிக்கை பிரகாரம் அனைத்து உத்தியோகத்தர்களும் சொத்து பொறுப்பு பிரகடனத்தை முன்வைத்துள்ளனர். |

| | |
|---|---|
| உத்தியோகத்தர்களினால் அரசிற்கு ஏற்பட்ட இழப்பு தொடர்பாக நி.பி 156 (1) பிரகாரம் அறவீடுகளை மேற்கொள்ளாமை | உத்தியோகத்தர்களினால் அரசிற்கு ஏற்பட்ட இழப்பு தொடர்பாக நி.பி 156 (1) பிரகாரம் அறவீடுகளை மேற்கொள்ளுமாறு உரிய விடயபொறுப்பு உத்தியோகத்தருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |
| உரிய சேவை காலத்தை நிறைவு செய்த உத்தியோகத்தர்களின் முறைப்படி இடமாற்றம் பெற்றுச் செல்ல தேவையான நடவடிக்கை மேற்கொள்ளாமை | தற்போது இடமாற்ற சபையின் மூலம் இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதில் உள்ளடக்கப்படாத இடமாற்றம் "உள்ளக இடமாற்ற சபை " பரிந்துரையின் பிரகாரம் இடமாற்றம் செய்யப்படுள்ளது. |

சுனில் கலகம,
மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர்
மாவட்ட செயலகம்,
பதுளை.

Sunil Galagama
District Secretary/Government Agent
Badulla.

எச்.எஸ்.டி.மஹேஷிகா பிரனாந்து ,
கணக்காளர் ,
மாவட்ட செயலகம்,
பதுளை.

H.S.D. Maheshika Fernando
Accountant
For District Secretary Badulla

## செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

S. Alokabandara
Secretary
Ministry of Public Administration,
Provincial Councils and Local Government

## அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2026 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

மாண்புமிகு (பேராசிரியர்) ஏ. எச். எம். எச். அபயரத்ன அவர்கள் (பா.உ)
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

Prof. A.H.M.H. Abayarathna
Minister of Public Administration, Provincial
Councils and Local Government
Independence Square, Colombo 07.